# மக்கள் மறு வாழ்வு

அடுத்த இதழ்
மே தின
சிறப்பிதழாக
வரும்

மலர்: 2] பங்குனி-மார்ச் 1984 விலை 75 காசு [இதழ்: 7


## தாயகம் திரும்பியோர் வெளி மாநிலங்களுக்கு செல்ல

# அச்சம் அடைகிறார்கள்!

**இலங்கையில் தான் இனக்கலவரங்களால் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு இல்லாது வாழ்ந்தோம் என்றால் சொந்த மண்ணாகிய இங்கு அதே நிலைக்கு ஆளாக வேண்டுமா ?**

இலங்கையிலிருந்து சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் தாயகம் திரும்பும் மக்கள் மறுவாழ்வு திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு பெற்று பிற மாநிலங்களுக்கு செல்ல அச்சப்படுகிறார்கள்

மேற்படி ஒப்பந்தத்தின் மூலம் வருகிறவர்களுக்கு மறுவாழ்வு திட்டத்தின் மூலம் பல்வேறு உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றது; அவற்றில் வேலை வாய்ப்பும் ஒன்று தமிழ் மாநிலத்தில் வேலை வாய்ப்புகள் அரிதாக இருப்பதால் இவர்கள் கர்நாடகா, ஆந்திரா, கேரளம் முதலான பிற மாநிலங்களுக்கு அனுப்பப் படுகிறார்கள்.

சமீபத்தில் கர்நாடகத்தில் நடந்து வந்த இனக்கலவரம் தமிழர்களுக்கு எதிரான போராட்டம் இம்மக்களை வெகுவாக பாதித்துள்ளது இதனால் பிறமாநிலங்களுக்கு சென்று வாழ அச்சப்படுகிறார்கள்.

இலங்கையில் தான் தமிழ் சிங்கள கலவரங்களால் நாங்கள் பாதிக்கப்பட்டோம்; வாழ முடியாது அவதிப்பட்டோம், இங்கு வந்தும் அதே இனக் கலவரங்களுக்கும் இனப்பிரச்சனைகளுக்கும் ஆளாக வேண்டுமா என்று கேட்கிறார்கள்

இவர்கள் மட்டுமல்ல; ஏற்கனவே குடியேறியவர்களை கூட சமீபத்திய கர்நாடக மாநிலக் கலவரம் வெகுவாகப் பாதித்துள்ளது மட்டுமல்ல; கடந்த காலத்தில் இவர்கள் குடியமர்த்தப்பட்ட இடங்களில் இவர்களுக்கு எதிரான சலவரங்கள் பிரச்சினை எழுந்திருக்கின்றன.

இத்தனை காலமும் பிற மாநிலங்களில் கொண்டு சென்று குடியமர்த்தப்பட்டவர்கள் 'வழியற்ற' காரணங்களாலும் விருப்பமற்ற நிலையிலும் வேதனையுடனேயே போய் சேர்ந்தார்கள் அப்படி செல்கிறவர்கள் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்தது.

மொழிப்பிரச்சனை ஒரு காரணம். தமிழைத்தவிர வேறு மொழியே தெரியாமல் சென்று அங்கு அவதிக்குள்ளாகிறார் அதற்காக அச்சப்பட்டார்கள்.

தமது பிள்ளைகளுக்கு படிப்பு வசதி செய்ய சிரமப்பட்டார்கள் அம் மாநிலங்களில் தாய்மொழியில் கல்வி புகட்ட முடியாதவர்களானார்கள் அதற்கான வசதிகள் இல்லை 'தாயகம் திரும்பியோர்' தம்பிள்ளைகளை அங்குள்ள பாடசாலைகளில் சேர்ப்பதில் பல பிரச்சனைகளுக்கு ஆளாகி வருகிறார்கள் காரணம் அங்கிருக்கும் அதிகாரிகளுக்கு இவர்களுக்குள்ள சலுகை உதவிகள் செய்வது குறித்து எதுவும் தெரியாது அதனால் தாயகம் திரும்பியோருக்குரிய உரிமைகளை சலுகைகளை பெற முடியாது தவிக்கவும் செய்கிறார்கள்.

இப்படி பிற மாநிலங்களில் குடியமர்த்தப்படுகிறவர்கள் பிறமாநிலங்களுக்கு செல்லும் போது தமது குடும்பத்தினர்களை - தாய் தகப்பன், சகோதர்கள் என்று பிரிந்து பிரிந்து வாழவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது குறைந்த வருவாயுடைய இவர்கள் பிரிந்து பிரிந்து வாழ்வதால் மேலும் மேலும் பொருளாதார வீழ்ச்சிக்கு ஆளாகி வருகிறார்கள்

இதுமாதிரி பலபிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வந்த இம்மக்கள் இனப் பிரச்சனைக்கு கலவரங்களுக்கு முகம் கொடுக்க அச்சப்படுகிறார்கள் தொடர்ந்து இனக் கலவரங்களால் அமைதி இழந்து அச்சத்தின் மத்தியில் வாழத் தயங்குகிறார்கள்.O

---

## 22-8-83 தூத்துக்குடி வந்த அகதிகள்

# கவனத்திற்கு

1983 ஜூலை கலவரத்தில் பாதிக்கப்பட்டு அகதிகளான 800 பேர் 22-8-83யில் பாரத் சீமா கப்பலில் தூத்துக்குடி வந்து சேர்ந்தார்கள்.

இவர்களுக்கு என ரூபா 422.28, ரூபா 275-15 உதவித் தொகை அரசு வழங்கியுள்ளது ஆனால் இதுவரை பட்டுவாடா செய்யப்படவில்லை.

சம்பந்தபட்ட அகதிகள், மதுரையிலுள்ள இராமநாதபுர மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட வருவாய் துறை அலுவலகர் அறிவித்திருக்கிறார். O

# மக்கள் மறுவாழ்வு

மலர்: 2] மார்ச் '84 [இதழ்: 7


## கருணைகரம் நீட்ட வேண்டும்!

தாய் நாடு என்று நம்பி வந்த இந்த நாட்டில் நாய்களாக அலைவதை விட, இலங்கையிலே சிங்களவர்களின் கொடுமைக்கு ஆளாகி சாவதே மேல் தாயகம் திரும்புவோர்களுக்கும், அகதிகளுக்கும் உரிய மறுவாழ்வு உதவிகளை அளிக்க முடியாத போது ஏன் அவர்களை இங்கே அழைக்க வேண்டும்? இவர்களுக்கு உதவ முடியாதவர்கள்தான் இலங்கைத்தமிழர் உரிமைக்காக குரல் கொடுக்கிறார்கள் கூட்டங்கள் போடுகிறார்கள், நிதி திரட்டுகிறார்கள்"

தாயகம் திரும்பிய மக்கள் மத்தியில் இந்த வெறுப்பும் சலிப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்த வெறுப்புக்கும், சலிப்புக்கும் காரணம், தாயகம் திரும்புவோர்களுக்கு வழங்கப்படும் மறுவாழ்வு உதவிகள் உரிய காலத்தில் உரிய முறையில் வழங்கப்படுவதில்லை இவர்கள் இங்கே எதிர்நோக்கும் பிரச்சனைகளை மனிதாபிமானத்தோடு சீர்தூக்கிப்பார்த்து அதற்கேற்ப உதவிகள் செய்யப்படுவதில்லை வருடக்கணக்காக இழுத்தடிக்கப்படுகிறார்கள் என்பது தாயகம் திரும்பியோர்களின் புகார்கள்.

மறுவாழ்வுத் துறையின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஏஜென்ட்டுகள், இடைத்தரகர்கள், காண்டிராக்ட்காரர்களிடம் காட்டுகின்ற அக்கறையை தனியாக சென்று மறுவாழ்வு உதவி கோருகிறவர்களிடம் காட்டுவதில்லை. உண்மையாக சேவை செய்யும் நோக்கோடு சங்கம் அமைத்துக் கொண்டு அணுகுகிறவர்களை கூட, அதிகாரிகளை நெருங்க முடியாதபடி—எதையும் பெற முடியாதபடி முட்டுக்கட்டைப் போடுகிறார்கள்—போடுவதாக அனைவரும் தெரிவிக்கும் கருத்து.

இதனால், இந்த மறுவாழ்வு உதவிகளையே நம்பி சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் வரும் தாயகம் திரும்பியோர், அந்த உதவிகளை உரிய காலத்தில் உரிய முறையில் பெறமுடியாமல் அவதிக்கும், அல்லலுக்கும் ஆளாகி வருகிறார்கள் [illegible] என்று சொல்கிறார்களே அதைவிட [illegible] மோசமான நிலைமைக்கு பெரும்பாலோர் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

தமிழர் பிரச்சனைக்கு கூட்டம் போட்டு, குரல் கொடுத்துச் உதவிகள் அளிக்கும் தமிழக அரசும், தமிழினத்தின் தலைவர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறை பணியாளர்களும், தாய்த்தமிழ் நாடு என்று நம்பி வந்துள்ள—வரும் தமிழர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் குடிப்பெயர்த்தப்படும் தாயகம் திரும்பிய—திரும்புகின்ற தமிழர்கள் செத்து மடியாமல் வாழ வழிவகைகளை செய்துக் கொடுக்க வேண்டும் - கருணைகரங்களை நீட்ட வேண்டும்.



## வாசகர்கள் எழுதுகிறார்கள்

### மத்திய - மாநில அரசுகள் செவிமடுக்க வேண்டும்!

தங்கள் பத்திரிகையின் பெப்ரவரி மாத இதழில் "தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு உதவி பெறுவதற்கான காலக் கெடுவை நீக்குக!" என்ற தலைப்பில் தாங்கள் எடுத்துக் காட்டியுள்ள காரணங்கள் கவனத்தை ஈர்க்கக் கூடியதாகும்.

இலங்கை–இந்திய (சிரிமா சாஸ்திரி மற்றும் சிரிமா இந்திரா) உடன்படிக்கைகளின் கீழ் இதுவரை சுமார் 4 லட்சம் பேர் தாயகம் திரும்பியிருப்பதாக தெரிய வருகிறது

அநேகமாக இவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு வழியில் அரசின் மறுவாழ்வு உதவிகளைப் பெறுவதற்கு தகுதியானவர்களே. தொழில், வியாபாரக் கடன்கள் மற்றும் வீடு கட்டுவதற்கான கடன் உதவிகள் அளிக்கப்படும் என்று இலங்கையில் உள்ள இந்திய புனர்வாழ்வு அதிகாரிகள் சிபார்சு செய்திருந்தும் கூட இது போன்ற உதவிகள் ஏதும் கிடைக்காத நிலையில் தாயகம் திரும்பியோர்களில் ஆயிரக் கணக்கானோர் அல்லல்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர்கள் ஆரம்பத்தில் குடியமர்ந்த இடங்களில் தொடர்ந்து வசிப்பதற்கு வாய்ப்பில்லை. தமிழ் நாடெங்கும் சுற்றிவந்து கொண்டிருக்கிறார்கள். உரிய வேளையில் மறுவாழ்வு உதவிகள் கிடைக்காததே இதற்கு அடிப்படை காரணமாகும்

அரசு அதிகாரிகள் உதவித் தொகை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை தெரிவிக்கிறார்களே தவிர உதவித் தொகை ஏதும் வழங்கப்படாதவர்களின் எண்ணிக்கையை தெரிவிப்பதில்லை

சென்னையிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் குடியேறியவர்கள் வீடு கட்டுவதற்கு மனை அரசு நிர்மத்திற்கு கிடைக்காததால் வீட்டுக் கடன் பெற முடியாதவர்களாக ஆயிரக்கணக்கானோர் இருக்கிறார்கள் இவர்களுக்கென நிரந்தர குடியிருப்பில்லை.

நிலைமை இவ்வாறு இருக்கையில் மறுவாழ்வு உதவிகள் அளிக்கும் விசயத்தில் "ஒரு வருடத்திற்குள் மனுச் செய்ய வேண்டும். 'ஐந்து வருடம் பூர்த்தியானால் எந்த உதவியுமில்லை" என்று காலக்கெடு விதித்திருப்பது எந்த வகையிலும் நியாயமானதல்ல

குடிபெயர்ந்தோர் நலன் கருதி தக்க சமயத்தில் தாங்கள் குரல் கொடுத்திருக்கிறீர்கள். மத்திய, மாநில அரசுகள் செவிமடுக்குமா?

–திருச்சிதாசன்

தாம்பரம்

# பிரச்னை தீராவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம்!

## கொடைக்கானல் தாயகம் திரும்பியோர் சங்கம் முடிவு

கொடைக்கானல் தாலுகாவில் 1964-1974ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் திரும்பியோர் ஆயிரக்கணக்கானவர்கள் வாழ்கின்றனர்.

இவர்களில் பலர் 10 ஆண்டுகளுக்கு முன் குடியேறியவர்கள் ஆவர். இவர்களுக்கு மண்டபம் முகாமில் முதல் தவணையாக வியாபாரக்கடன் கொடுக்கப்பட்டுள்ளது. மேலதிக கடன் கேட்டு இவர்கள் செய்து கொண்ட விண்ணப்பங்கள் இதுவரை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படாத நிலையில் உள்ளன',

இவ்வாறு சிலோன் ரீபெட்ரியேட் சங்கம் கொடைக்கானல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் புனர்வாழ்வு உதவிகள் பெறுவதில் இருக்கும் சிக்கல்கள் குறித்து முறையீடு செய்துள்ளது.

மேலும்,

அனைவரும் மேலதிக கடன் பெறத் தகுதியுள்ளவர்களாவர்.

அரசினால் கேட்கப்பட்ட சிபாரிசுகளையும் நிவர்த்தி செய்துள்ளனர்.

பல குடும்பங்களுக்கு இந்திய உதவித் தூதரகம் கண்டி விவசாய நிலம், விவசாயக் கடன் உதவித்தொகை போன்றவைகளை பரிந்துரை செய்துள்ளது.

இவர்களுக்கு இதுவரை நிலமும் கொடுக்கப்படவில்லை மற்றும் அவர்களுக்கு எவ்வித புனர்வாழ்வு உதவிகளையும் அரசு செய்துகொடுக்கவில்லை.

இவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வீடு கட்டுவதற்கான கடன் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதுவரை கொடைக்கானலில் ஒருவருக்காவது வீட்டுக்கடன் கொடுக்கப்படவில்லை.

வீட்டுக்கடன் கேட்டு விண்ணப்பம் செய்து கொள்ளும்பொழுது வீட்டடி நிலம், வீட்டு பிளான், எஸ்டிமேட், அக்ரிமெண்ட் போன்றவைகள் கேட்கப்படுகின்றன. பலருக்கு நிலம் வாங்குவதற்கு வழியில்லாமல் போய் விடுகின்றது. ஆயினும் சிலர் நிலம் வாங்கி அரசுக்கு பத்திரம் எழுதி கொடுத்திருக்கின்றனர். லோனும் ஜேங்சன் ஆகி பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனாலும் இன்னும் இவ்விடயங்கள் முடிவு செய்யப்படாத நிலையில் உள்ளன.

இவர்கள் அனைவரும் இந்திய அரசினாற் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நம்பி தாயகம் திரும்பியவர்கள் ஆவர். கொடைக்கானல் மலைப்பகுதியில் பெருந்தோட்டங்களோ, தொழிற்சாலைகளோ, கைத்தொழில் நிறுவனங்களோ மற்றும் வேலை வாய்ப்புகளோ இல்லாததால், இம்மக்கள் அன்றாட வாழ்க்கையில் பெரும் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டுள்ளனர்.

அனேகமான குடும்பங்கள் நில உடமையாளர்களின் தோட்டங்களில் உள்ள காவல் குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் அதற்கு பிரதி உபகாரமாக அந்த தோட்டங்களை கூலி இன்றி பாதுகாப்பது போன்ற வேலைகளைக் கவனிக்கின்றனர். சிலர் வாடகை வீடுகளில் குடியிருக்கின்றனர். இன்னும் சிலர் புறம்போக்கு நிலங்களில் எவ்வித உரிமையும் இன்றி குடிசைகளை அமைத்துக் கொண்டு மிருகங்களைப்போல் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒவ்வொரு விதமாக காரணங்களைக் காட்டி விண்ணப்பங்களை தட்டிக் கழிக்கின்றனர்.

வீட்டுலோன் கேட்டால் "வியாபாரக் கடனை திருப்பிக்கொடு" என்று ஒரு நிபந்தனையை வைக்கிறார்கள்.

சீசனுக்கு மட்டும் விவசாயிகளிடம் கூலிவேலை கிடைக்கின்றது. வருடத்தில் 6 மாதங்கள் வேலையே கிடைக்காத சூழ் நிலையில் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர். சுயவேலை வாய்ப்பைத் தவிர வேறு வழியில்லாததால் இவர்களுக்கு அரசு ஒப்பந்தப்படி லோனோ அல்லது நிலமோ கொடுத்து இவர்களின்

(4ம் பக்கம் பார்க்க)

## வாசகர்கள் ஆதரவாளர்கள் கவனத்திற்கு

'மக்கள் மறுவாழ்வு' அலுவலகம் கீழ் காணும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஆகவே அனைத்து தொடர்புகளுக்கும் கீழ் கண்டுள்ள முகவரிக்கே எழுத வேண்டுகிறோம்.

**மக்கள் மறுவாழ்வு**

1, தெற்கு கங்கையம்மன்

கோயில்வது தெரு

சென்னை 600094

## நாடற்றவர் பிரச்னைக்கு தீர்வு . . . ?

இலங்கைத் தமிழர் பிரச்சனைக் குறித்து கூட்டப்பட்டுள்ள கொழும்பு வட்டமேசை மாநாட்டில், அனைத்துக் கட்சிகளுமே நாடற்ற மக்கள் பற்றி பேசியுள்ளன. நாடற்றவர்கள் பிரச்சனை, இந்திய இலங்கைப் பிரச்சனையில் தலையீடு உடனடியான விசயமாக இருக்கிறது. இந்த அடிப்படையில் இவர்களுக்கு குடியுரிமை வழங்குதல் குறித்து கருத்து வட்ட மேசையில் இடம் பெற்றுள்ளது.

நாடற்றவர்கள் பிரச்சனைக் குறித்து அனைத்து நாடுகள் சட்டம் பற்றியும் அந்த அடிப்படையில் இலங்கையில் நாடற்றவர்களாக இருக்கும் இந்திய வம்சாவழி தமிழர்களுக்கும் குடியுரிமை வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி அனைத்துக் கட்சிகளின் வட்டமேசை மாநாட்டில் அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.

அனைத்து நாடுகள் சட்டப்படி, நாடற்ற மக்களின் குடியுரிமை ஒரு பிரச்சனையாக இருக்குமானால், அதற்காக எந்த நாடும் நேரடியாக ஒரு நாட்டு மீது இராணுவ தலையீடு தீர்மானிக்கலாம். இது சட்டப்படியானதாகும் என்று 'தி ஐலண்ட்' ஏடு (இலங்கை) சுட்டிக் காட்டியுள்ளது.

சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தப்படி 6 லட்சம்பேர் இந்தியாவுக்கு குடிப்பெயர்த்தப்படுவார்கள் இவர்களில், 5 லட்சத்து 7 ஆயிரம் பேரே இந்தியாவுக்கு மனு செய்துள்ளார்கள் மிகுதி 93 ஆயிரம் பேர் எந்த நாட்டுக் குடியுரிமைக்கும் மனு செய்யாமல் இருக்கிறார்கள் இவர்களோடு, 1964 யிலிருந்து இயற்கையாக இவர்களோடு அதிகரித்தவர்களும் இந்த ஒப்பந்தத்திற்கு உட்படாமல் இருக்கிறார்கள் என்று சிறிலங்கா அரசு தெரிவிக்கிறது.

சட்ட ஆலோசனைகள்

# சட்ட உதவிக்கு விண்ணப்பம் தாக்கல்

சட்ட ஆலோசனைக் கழகத்தின் உச்ச குழுவுக்கு ஒரு அலுவலகமும், ஒரு முழுநேர செயலாளரும், பணியாளர் தொகுதி உண்டு ஒவ்வொரு மாவட்ட, வட்ட குழுவுக்கும் நீதி மன்றத்துக்குள் ஒரு முழு நேர நிர்வாக உதவியாளர் பொருப்பில் ஒரு அலுவலகம் இருக்கிறது. நீதி மன்றங்களில் பணிப் புரிந்த ஓய்வு பெற்ற அலுவலகம் பணியாளர்கள் இவ் அலுவலகங்களில் பணி செய்கிருர்கள்.

நிர்வாக உதவியாளர்களால்; மேற்படி அலுவகங்களில் சட்ட உதவி மற்றும் ஆலோசனைக்கான விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. நிர்வாக உதவியாளர் தாம் பெறும் விண்ணப்பங்களை பதிந்து ஆலோசனை மைய வழக்கறிஞர் முன் விசாரணைக்காக வைப்பார். சட்ட உதவி கொடுப்பதற்கான செல்வ நிலைமையைப்பற்றி விண்ணப்பதாரர் அளிக்கும் உறுதி மொழியே இந்த நிலையில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

விண்ணப்பதாரர் எழுதத் தெரியாதவராக இருந்தால் விண்ணப்பத்தாரர் கூறும் வார்த்தைகளை உதவியாளர் விண்ணப்பமாக எழுதிக் கொண்டு அவரிடம் வாசித்துக் காட்டி, அவருடைய கையெழுத்தையோ அல்லது பெருவிரல் ரேகைப் பதிவையோ பெற்று விண்ணப்பம் பதிவு செய்துக் கொள்ளப் படும்,

விண்ணப்பத்தாரர் வரும் போது தேர்ந்தெடுத்தப்பட்டியல் ('A' தேர்ந்தெடுப்பட்டியல் "B" தேர்தெடுத்த பட்டியல் என்று இரண்டு அட்டவணையில் வழக்கறிஞர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார்கள்) வழக்கறிஞர் உடனே கவனத்துடன் விசாரித்து, நீதி மன்றங்கள் அல்லது ஆயங்களின் வழியாக கிடைக்கக் கூடிய பரிகாரங்களுக்கான விண்ணப்பத்தையும், நிர்வாகி அதிகாரிகளிடம் கடிதப் போக்கு வரவு மூலமாக கிடைக்கக் கூடிய பரிகாரங்களுக்கான விண்ணப்பங்களையும் வேறு படுத்தி அதற்கேற்ப நடவடிக்கைக்கு ஆவன செய்வார்.

விண்ணப்பத்தாரரின் பிரச்சனை மிகவும் எளிதாகவும் சரியான ஆலோசனையின் மேல் உடனடியாகத் தீர்க்கப்படக் கூடியதாகவும் இருந்தால் வழக்கறிஞர் அவ்வாறே ஆவன செய்வார்.

நீதி மன்றங்கள் அல்லது ஆயங்களின் மூலமாக தீர்க்கப் பட வேண்டியது அல்லாத - சட்டப் பிரச்சினையற்ற - நிர்வாக அதிகாரிகளின் மூலமாக கிடைக்கக் கூடிய பரிகாரங்களுக்கு வழக்கறிஞர்கள், விதிகளின் படியோ நேர்மை நெறி முறைப் படியோ விண்ணப்பதாரருக்கு பரிகாரம் கிடைக்க வேண்டுமா என்று ஆராய்ந்து அதற்கு அவசியமான விண்ணப்பத்தை தயாரித்து விண்ணப்பத்தாரரிடம் கையெழுத்தைப் பெற்று, வழக்கறிஞர் தன்னுடைய கருத்தையும் எழுதி, ஏற்ற அதிகாரிக்கு அனுப்பும் படி கிளைக் குழுவின் தலைவருக்கு அனுப்ப வைப்பார்.

விண்ணப்பத்தை கவனிப்பதற்கு வருவாய்த் துறையில் உள்ள பதிவுகட்டுகளில் இருந்து தகவல் தேவை என்று கருதினால் வழக்கறிஞர் ஏற்ற அரசுத்துறைக்கு குழுவின் ஆணையின் மேல் கடிதம் எழுதும் படி உதவியாளரைக் கேட்டுக் கொள்வார். இத்தகைய முதல் நிலை ஆராய்ச்சி விண்ணப்பத்தாரின் தேவை என்ன என்பதை தெளிவு படுத்துகின்றது, மற்றும் அவருக்கு ஏற்ற பரிகாரமும் என்ன என்பதையும் குறிப்பாக உணர்த்துகிறது இது அதிகாரிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

- ஆர். ராஜகோபாலன்
அட்வகேட்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கைக்கு உத்திரவாதம் அளிக்கும்படி கேட்டுக் கொள்கின்ருேம்.

கீழ் ஒப்பமிட்டுள்ள நாங்கள் அனைவரும் தனித்தனியாகவோ அல்லது சங்கத்தின் மூலமாகவோ பல முறை முறையீடுகள் செய்தும் இது வரை சம்பந்தப்பட்ட "அதிகாரிகளோ அல்லது தாங்களோ ஒரு வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலமை நீடிக்குமாயின் நாங்கள் பட்டினியாலும் இதன் காரணமாக நோயினாலும் இறக்க நேரிடும். இப்படி அழிந்து விடுவதை விட உங்கள் முன் உண்ணா விரதம் இருந்து இறந்தால் அது பெருமையான செயலாக இருக்கும் என்று கருதுகிரேம்.

15 நாட்களுக்குள் எங்களுக்கு சரியான விமோசனம் கிடைக்க நீங்கள் வழி செய்யாத விடத்து நாங்கள் அனைவரும் குடும்ப சகிதமாக, தாலுகா அலுவலகம் முன்பு சாகும்வரை உண்ணா விரதம் அனுஸ்டிக்க முடிவு செய்துள்ளோம் என்பதை இத்தால் அறியத் தருகிரேம் என்று சங்கம் தெரிவித்துள்ளது. O

# தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் பிரதிநிதித்துவ பேரவை கூட்டம்

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் 8 வது பிரதிநிதித்துவ பேரவை கூட்டம் மார்ச் மாதம் 23-ம் திகதி, சென்னை, கிரீம்ஸ் ரோட்டிலுள்ள வங்கியின் கட்டிடத்தில் நடைபெறவிருக்கிறது.

இதையொட்டி வங்கி பிரதிநிதிகளின் யூனியன் கூட்டம் வியாசர்பாடி, பக்தவத்சலம் காலனியில் 22 ம் தேதி மாலே நடைபெற விருக்கிறது. ◡

**உங்கள் சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள் சந்தா செலுத்தாதோருக்கு தொடர்ந்து பிரதிகள் அனுப்பப் படமாட்டாது**

-மக்கள் மறுவாழ்வு


## 'மக்கள் மறுவாழ்வு' இதழ் அறிக்கை
(பகுதி 4 விதி 8 காண்க)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடுமிடம் | : | சென்னை |
| 2. வெளியிடும் காலம் | : | மாதம் ஒருமுறை |
| 3. அச்சிடுபவர் பெயர் | : | L.S. சீனிவாசன் |
| இனம் | : | இந்தியத் தமிழர் |
| மூகவரி | : | 29, பி இ.காலனி, 4வது தெரு, சென்னை-600024. |
| 4. வெளியிடுபவர், ஆசிரியர் பெயர் | : | டி.எஸ். ராஜு |
| இனம் | : | 31, கங்கையம்மன்கோயில் தெரு |
| முகவரி | : | சென்னை-600094 |
| 5. ஒருவிழுக்காட்டுக்குமேல் முதல்போட்டுள்ளபத்திரிகையின் பங்குதாரர் அல்லது உரிமையாளர் பெயரும் முகவரியும் | : | டி. எஸ். ராஜு 31, கங்கையம்மன்கோயில் தெரு சென்னை 600094. |

டி. எஸ். ராஜு ஆகிய நான் மேலேகண்ட விவரங்கள் யாவும் என் அறிவுக்கும், உணர்வுக்கும் தெரிந்தவரை உண்மையானவை என்று உறுதி கூறுகிறேன்.

நாள்: 28-2-1984.

(ஒப்பம்) டி.எஸ். ராஜு
வெளியிடுபவர்



## 9

தண்ணீர் மலைகளிலிருந்து நீர்வீழ்ச்சியாய் எப்பவும் கொட்டிக்கொண்டே இருக்குமே. காட்டாற்றில் கரை புரண்டோடிக் கொண்டிருக்குமே மலையின் மடிகளில் ஆறாய் ஓடிக்கொண்டிருக்குமே மடுக்களிலிருந்தும், குன்றுகளிலிருந்தும் அருவியாய் ஓடையாய் ஓடிக்கொண்டிருக்குமே

இந்த நீருக்கு இங்கே போட்டியும் இல்லை, பொருமையும் இல்லை, சண்டையுமில்லை 'மழை வரவில்லை வரட்சி வந்துவிட்டது' என்று எப்போதாவது அத்தி பூத்த மாதிரி தலைக்காட்டும்

ஆனால் இங்கே—

தண்ணீருக்கே படுகிறபாடு தெருவில் புழுதி பறக்கிறது- பொடி சுடுகிறது

'ச்சே வெயில் கூட ஒத்துக்களையே?

இதை எல்லாம் புதிதாகப் பார்த்து அனுபவிக்க மனதுக்குள் பூதாகரமான எண்ணங்கள்

'ஒரே வேக்காடாக இருக்குது வயல் காட்டு பக்கம் போனாலாவது கொஞ்சம் மாதிரி இருக்கும்' என்று வயல்காட்டுப்பக்கம் போனால் அங்கேயும் "கண்டிப் பேராண்டி காட்டுக்கு போகிறயா?" சொப்தக்கார கிழவிக் குறுக்கிடுவாள்

"ஆமாம்" என்று அவருக்கு பதில் கொடுக்க ஆரம்பிப்பேன

"இந்த ஊரு மாதிரி இருக்குமா அந்த ஊரு?"

"இந்த ஊரு மாதிரி யா? அந்த ஊருக்கு இந்த ஊரு எந்த மூலை?"

'அந்த சொகம் இங்க வராதாமே" என்று அவளது வார்த்தையில் ஆவலும், ஆச்சரியமும் மேலிடும்

"ஆமாம் இங்க பாரு காயுது குடிக்கக் கூட தண்ணீ கெடக்க மாட்டேங்குது? கையேந்தி நிக்க வேண்டி இருக்குது " இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் எனக்கும் சும்மா இருக்கத் தோனுது.

"அங்க வருஷம் முத்தூண்டும் மழை பேயுமாமே' வானத்தை நம்பி வாழும் ஜனங்கள். அவளுக்கு அதில் தான் அக்கறை.

"ஆமாம் இங்கே வருஷம் ஒரு மழையக்கூட பார்க்க முடியலே தரித்திரம் புடிச்ச ஊரு" என்றதும் அவளும் சலித்துக் கொள்வாள்;

'என்ன பண்ணுறது ஊருல நீதி நியாயம் இல்லாம போச்சு பின்ன எப்பிடி பேயும்"–

அவளுக்கு என்ன கவலையோ?

"வந்து தான் அவஸ்தப்படுகிறோம் ஏண்டா வந்தோம்னு' -எனக்கு என் கவலே.

"அது சரி வந்தாச்சு இனி கவலப்பட முடியுமா? பொழைப்ப பார்க்க வேண்டியது தான்" என்று பதிலுக்குப் பார்க்காமல், தொடர்ந்து பேசுவாள்.

"இருக்கிற காட்ட கரய பாக்க வேண்டியது தான். அதுவும் இல்லேனு நாலு ஆட் புடிச்சுக்கிட்டு மேய்க்க வேண்டியதான் நாலு வருஷத்தில் காசாயிடுது' என்று அவள் தன் ஆட்டு மந்தையை அதட்டுவாள்.

அவளுக்கு தெரிந்தது அந்த ஆட்டு மந்தை தான், அதை மிஞ்சிப்போனால் இரண்டு எருமை மாட்டையோ, இல்லே பசு மாட்டை பற்றி பேசுவாள். அதுவும் மிஞ்சிப் போனால், கடலேயோ துவரையோ விதைக்க 'நாலு குழி' மேட்டுக்காடு இல்லே விதைக்க இரண்டு குழு நஞ்சை நிலம் பற்றி பேசுவாள் அதுக்கு மேல் அவளுக்கு தெரியாது; சொன்னாலும் புரியாது. இதுமட்டுமே உலகம் என்று வாழ்பவள். அது வரை தான் அவளால் யோசனை சொல்ல முடியும்.

அவள் சொன்னதைக் கேட்டு நான் சிரித்தேன்.

"என்ன பேராண்டி சிரிக்கிற' என்று கேட்பாள்

"இல்ல. இது உனக்கு சரி என்னால முடியுமா ?" என்று கேட்பேன்.

"ஏன் முடியாது. இவ்வளவையும நான் ஒருத்தி மேய்க்கல ?" என்பாள்

பெரிய ஆட்டு மந்தையை அவள் மேய்ப்பது சாதனை தான். மேய்ப்பதற்கும் என்ன தான் இருக்கிறது. எங்கும் புழுதி பூத்துப் போயிருக்கிறது பாதையோரங்கள் உயர வளர்ந்திருக்கும் சப்பாத்திச் செடிகள் கூட நீர் வற்றி, வாடி நின்றன. அங்கு மிங்கும் முள் செடிகள் மூற்களுக்கிடையிடையே முளைவிட்டு தலைகாட்டி நிற்கும் பசிய இலைகள். அவற்றைத் தேடித்தேடி மேய்வதில் ஆடுகளின் பிரயத்தனம் – பெரும்பாடு ...

அப்போதெல்லாம்—

'அங்கே எங்க பார்த்தாலும் புல்லும், புதரும் செடியும் கொடிமாக இருக்குமே. பச்சை பசேரென்று எவ்வளவு செழிப்பாக வளர்ந்திருக்கும்' என்று பழைய நினைவுகள்; மனம் லயித்துப் போய் விடும்.

அங்கே - மலைநாட்டு மண்ணின் இயற்கை வளம் மனக்கண்முன் தெரியும் பச்சை பசேரென்று தேயிலைச் செடிகள்,சைப்ரஸ்,கருப்பந்தேயிலை காட்டு மரங்கள்; அடர்ந்தகாடுகள், புல்வெளிகள்-கால் வைக்கும் இடமெல்லாம் செழித்து வளர்ந்த புற்கள், செடி கொடிகள்.

காலை வேளையில் - நடக்கிற போது பாதை இருமருங்கிலும் வளர்ந்து வளைந்து கிடக்கும் புற்களில் படிந்த பனிநீர் கால்களில் பட்டு 'சில்' என்றிடும்; உடலெல்லாம் சிலிர்த்து மனமே குளிர்ந்திடும்.

'ஓ — அது மாதிரி வருமா?'

அவற்றை நினைத்து பெருமூச்சு விடுவேன்.

"என்னமோ நீ சொல்லிட்ட லேசா— பாக்கலாம்" என்று அந்த கவலையோடு நடையைக் கட்டுவேன்.

"இனிமேல அத இத பாத்தா ஆகுமா? பாடுபட்டாத்தான் ஆகும்" என்று அவள் சொல்லிக் கொண்டே மந்தையை ஓட்டிக் கொண்டுப் போவாள்.

–இப்படி எத்தனையோ கேள்வி விசாரணைகள், பேச்சுகள், அறிவுரை, ஆலோசனைகள்.

இவை யெல்லாம் சில வேளை நன்றாக இருக்கும்–உற்சாகமும் தரும். சில வேளையோ அதற்கு மாறாக இருக்கும். ஆத்திரம் கூட பற்றிக் கொண்டு வரும்.

உபதேசத்திற்கு என்ன குறைச்சல் என்று எரிச்சலோடு வயலுக்குள் நுழைந்தால் எங்கள் வயலை எப்போது குத்தகைக்காரன் விடுவான் என்ற கவலை.

O

எங்களுக்கு இரண்டு இடத்தில் கொஞ்சம் நஞ்சை இருந்தது. ஒன்று மூன்று குழி; மற்றது இரண்டு குழி; இரண்டும் கேணிப் பாசனம் தான் – மேட்டுக்காடு கொஞ்சம் இருந்தது.

நாங்கள் ஊருக்கு வந்தது வைகாசி முடியும் போது - அப்போது வயலில் உழுது நாத்து நட்டாகி விட்டது அடுத்த சித்திரையில் தான் குத்தகைக்காரர்கள் விடுவார்கள்.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலை கிடைக்கும் வரை வயல் வேலை செய்யலாம் என்றால் அதுவும் தெரியவில்லை- அதற்கு சமர்த்தும்' இல்லை—

முதலில் என் மாமா வீட்டு வயலுக்கு போய் வந்தேன்; வேலை செய்யும் ஆட்களோடு ஆளாய் நானும் மண் வெட்டியை தூக்குவதுண்டு.

'கண்டிக்காரர் என்ன இப்பிடி தண்ணிக்கட்டுறீங்க''

''என்ன இப்பிடி வெட்டுறீங்க?''

''மாட்டக் கூட ஓட்ட முடியில்லயே''

என் வேலையைப் பார்த்து மாறி மாறி ஏதாவது சொல்வார்கள்.

உங்களுக்க தேயிலைத் தோட்டத்திலே வேலை செய்ய தெரியுமா? அப்பிடித் தான் நாங்க, என்னெக்கு வயலப்பார்த்தோம் வயல வேலை செய்ய?'' என்று எதையும் விட்டுக் கொடுக்க மனம் வராது.

இருந்தாலும் அவமானமாக இருக்கும், இப்பிடி ரொம்பவும் லாயக்கில்லாதவன்னு நினைக்கிறாங்களே' என்று

'இதெல்லாம் முன்னமே தெரியாமப் போச்சே'

அதற்கு முன்னாலே கொழும்புக்குப் கண்டிக்கும் செல்கிற போது வயல்வெளிகளைப் பார்த்துக் கொண்டே பிரயாணம் செய்திருக்கிறேன் அதற்கு பின்னால், நான் இந்தியாவுக்கு வருமுன் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகளையெல்லாம் சுற்றிப்பார்த்து விட வேண்டுமென்ற தீர்மானத்தில் யாழ்ப்பாணம் போனபோது பார்த்தேன்.

நான் எட்டாம் ஒன்பதாம் வகுப்புகளில் படிக்கும் போது தமிழாசிரியராக இருந்த சுப்பிரமணிய மாஸ்டர் வீட்டுக்குப் போயிருந்தேன் இரண்டு தினங்கள் அவரது வீட்டில் தங்கி இருந்தேன். அப்போது தான் அவரோடு வயலுக்கு நானும் போயிருந்தேன்.

அவர் வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு வேலை செய்யும் ஆட்களை விரட்டியது இப்போது நினைவில் நிற்கிறது

மண்வெட்டியும் கையுமாக அவரும் வயலில் இறங்கி வேலை செய்தார்

எனக்கு ஆச்சரியமாகக்கூட இருந்தது மாஸ்டர் எம். ஏ படித்தவர், கல்லூரியில் வாத்தியார் வேலையும் பார்க்கிறார் இவர் வயலிலும் இறங்கி வேலை செய்கிறாரே என்று

கண்களுக்கு எட்டிய தூரம் மட்டும் வயல் வெளி; இடையிடையே தென்னந் தோப்புகள்; பனந்தோப்புகள்

'இந்தியாவிலும் இப்படித் தான் இருக்குமோ. இது மாதிரி நம்ம ஊருலயும்' என்ற நினைவுகளும் எழுந்தன.

மாஸ்டரிடம் கேட்டேன் ''சேர் இந்தியாவும் இப்படி தான் இருக்குமா?''

''ஆமாம் இந்தியாவில் தமிழ்நாடு யாழ்ப்பாணம் மாதிரி தண்டா இருக்கும்'' அவர் ஏற்கனவே இந்தியாவுக்கு வந்திருக்கிறார்.

''தமிழ் நாட்டில உமக்கு ஊர் எது?'' அவர் கேட்பார்

''திருச்சி ஜில்லாதான் சேர்'' என்றேன்

''நல்ல ஊர் தான்டா காவிரி ஓடுது'' இப்பிடி சொன்னதாக ஞாபகம்.

தொடர்ந்து கேட்டார்.

''அங்க உறவினர்கள் எல்லாம் இருக்கிறாங்களா?''

''ஆமாம் சேர் எங்க மாமா இருக்கிறாரு எங்க அம்மாவோட கூட பொறந்தவரு எங்களுக்கும் அங்க வீடு நிலம் எல்லாம் இருக்கு சேர்'

''அப்படியே... பரவாயில்லை உமக்கு வயல் வேலை யெல்லாம் தெரியுமோ'' என்று கேட்டார்.

எனக்கு அது சங்கடமாக இருந்தது.

''தெரியாது சேர்''

''ஆமாம் ஆமாம் எப்படி தெரியும்? தோட்டக்காட்டில வேலை செய்கிற நீங்கள்'' என்று அவரே சமாதானம் சொல்லிக் கொண்டார்

மலை நாட்டிலே இருப்பவர்களுக்கு தேயிலை, றப்பர் தோட்டத்து வேலைகளை தவிர வேறொன்றும் தெரியாது அதுவும் தேயிலைத் தோட்டத்திலே இருப்பவர்களுக்கு றப்பர் தோட்டத்து வேலை கூட தெரியாது றப்பர் தோட்டத்து வேலை செய்கிறவர்களுக்கு தேயிலைத் தோட்டத்து வேலையும் தெரியாது இரண்டு கலந்த 'நாட்டு தோட்டங்'களிலே இருக்கிறவர்கள் அதற்கு கொஞ்சம் விதிவிலக்கு

தோட்டங்களில் தொழிலாளியாகத்தான் எல்லோரும் வேலை. தோட்டத்தில் ஒருவர் இருவர் என்றுதான் கங்காணி கணக்கப்பிள்ளை, சூப்பர்வைசர் வேலை, கொஞ்சம் மிஞ்சினால் டீமேக்கராக இருப்பார்கள் அரிதாக தோட்ட ஆபீஸ்களில் வேலைப் பார்ப்பவர்கள் கார், லாறி டிரைவர்களாக இருப்பார்கள் இவை எல்லாம்' அற்பசொற்பம்' சமீப காலமாகத் தான் வாத்தியார் வேலையிலும் சேர்கிற முயற்சிகள். ஒரு முன்னேற்றம் சிலர் அத்திப் பூத்த மாதிரி விதிவிலக்காக இருந்தார்கள் முன்னேறி பெயர் சொல்கிற மாதிரி இருக்கிறார்கள்

இப்போது தோட்டங்களின் நிலவரம் எப்படி எப்படியோ மாறிவிட்டதாக சொல்கிறார்கள்.

இந்த தோட்டத்து வேலைகளைத் தவிர வேறென்ன தெரியும்? பெரும்பாலும் தோட்டத்தை விட்டு வெளியே சென்றால், கடை கண்ணிகளில் தான் வேலை செய்வார்கள் எனக்குக் கூட இப்போது ஞாபகம் வந்தது யாரோ இந்தியாவுக்கு போய் வந்த ஒருவர் பத்திரிகையில் எழுதியிருந்தார்

'இந்தியாவுக்கு போகிறவர்கள் தேயிலை, றப்பர் தோட்டங்களை மட்டும் நம்பி போய் விடக் கூடாது— இது விவசாய நாடு. தொழில் வளர்ச்சி பெற்ற நாடு— ஆதலால் விவசாயம் இதர தொழில் போன்ற வற்றில் அனுபவமும், பயிற்சியும் இருந்தால் பிழைத்துக் கொள்ளலாம்— சுய முயற்சியில் ஈடுபடும் வகையில் கைத் தொழில் போன்றவற்றில் பயிற்சி பெற்று செல்வது நல்லது'

எனக்கு அப்போது இதை நினைக்க மலைப்பாக இருந்தது.

'தோட்டத்தில் மண் வெட்டி பிடித்து வேலை செய்தும் விவசாயம் செய்ய தெரியாதே' என்று அப்போது நினைத்துக் கொண்டேன்.

யாழ்ப்பாணம் போன வேளை தான் நான் வயலை மிதித்திருக்கிறேன்.

''ஆறுமாதம் வேலைசெஞ்சா ஆறுமாதம் உட்கார்ந்து சாப்பிடலாம் அங்கே'' என்று தோட்டத்தில் சிலர் சொல்வது அப்போது நினைவுக்கு வந்தது

''அங்க போனா காலாட்டிக் கிட்டு சாப்புடலாம்'' என்று சின்னத்தம்பி கங்காணி அடிக்கடி சொல்வார்.

அந்த வயல் வேலைகளைப் பார்த்த போது எனக்கு அப்படியொன்றும் படவில்லை

'அப்படியா இந்த வேலை இருக்குது' வரப்பு வெட்டுவது உழுவது சேறு கலப்பது விதைப்பது, நாற்று நடுவது, தண்ணீர் கட்டுவது — என்று மலைப்பும் தட்டியது.

அப்போது, நம்ம கூட முன்னமே வந்து இதை எல்லாம் தெரிஞ்சி வச்சிருக்கணும் இத்தனை காலமா இதெல்லாம் தெரியாம இருந்துட்டோம்' என்று மனமும் குறுகுறுத்துண்டு.

இங்கே—ஊரும், சூழ்நிலையும், சுற்றுடலும், உறவுகளும் அனுபவங்களும்... எல்லாம் புதியன.

எதிர்நீச்சல் போடுகிற முயற்சி; அந்த முயற்சிகளை முறியடிக்கிற மாதிரி அந்த ஒரு வருடக்காலத்திற்குள் என்னென்னவோ நடந்துவிட்டன

(தொடரும்)

# வன மசோதா — சில பிரச்சனைகள்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

காடுகள் அழிவால் வெள்ள அபாயம் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. நிலப்பரப்பு நீர் அரிப்பினால் பாதிக்கப்படுகிறது. ஏறத்தாழ இதன் மூலம் 60% க்கும் மேலான நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. நிலமும் சத்தை இழக்கின்றது. இவ்விதம் சத்து அழிவதாவது, ஒவ்வொரு வருடமும் அதிகமாக இருக்கின்றது. எனவே இந்த பாதிரிக் காடுகள் அழிக்கப்படுவதை எதிர்த்து சில வகைத் திட்டங்கள் நிறைவேறினால் நல்லது

சமூகவனம் என்கிற கொள்கையை நடைமுறைபடுத்தும் போது காட்டழிவைத் தடுக்க முடியும். இதை அரசாங்கம் அவசியம் ஆதரிக்க வேண்டும். ஏறத்தாழ எல்லாக் கிராமப் பகுதிகளிலும் தரிசாகக் கிடக்கும் நிலங்கள் உபயோகிக்கப்பட்டு, பயிர் செய்ய வேண்டும். இந்தியா முழுவதும் லட்சக்கணக்கான ஹெக்டேர் நிலங்கள் தரிசாய்க் கிடந்து பயனில்லாமல் அழிவதைத் தடுக்க இதனால் முடியும். இதனால் நிச்சயம் ஒரு மற்றம் விளையும்.

முதலில் தொழிற்சாலைகள் போன்றவற்றில் எரி பொருளாக உபயோகப்படுத்தப்படும் மரத்தை நிறுத்தி, வேறு மாற்றுப் பொருளை அரசு கண்டுபிடிக்கத் திட்டமிட வேண்டும்.

தரிசான நிலங்களை விளை நிலங்களாக்க ஆதிவாசிகளால் தான் முடியும் அவர்களது முயற்சியின்றி அரசாங்கம் எதைச் செய்தாலும் அந்த முயற்சி பயனற்றுப்போகும்.

"காட்டை அரசாங்கம் பாதுகாக்க எந்தவித முயற்சியையும் செய்யவில்லை" என்று மக்களிடம் இருக்கின்ற அபிப்பிராயத்தை விலக்கி, ஆதிவாசிகள் ஆதரவுடன் வன இலாகாவானது செயல்பட வேண்டும். இன்றைய நிலையில் பழவகை மரங்களைப் பயிரிடுவதில் உயர்மர வளர்ப்பைவிட 20 மடங்கு அதிக லாபம் கிடைக்க வாய்ப்பிருக்கின்றது

கிராமப்புறங்களில் உள்ள காடுகள் அந்தந்தக் கிராம மக்களின்கீழ் இருக்கும் நிலைமையை உருவாக்கலாம்.

இந்தவிதமான சரியான சமூக வனத் திட்டத்தால் காடுகள் அழிவது தடுத்து நிறுத்தப்பட்டு, காட்டைச் சார்ந்து தங்களது வாழ்க்கையை

## யூகி

அமைத்துக் கொண்டிருக்கும் ஆதிவாசிகளது, பிற மலை வாழ் மக்களது வாழ்வையும் சீரழிக்காமல் தடுக்க முடியும். பயிரிடப்படாமல் கிடந்தநிலங்களை பயிரிடுவதற்கு உட்படுத்துவதன் மூலம், உற்பத்தி பெருக்கமடைந்து, கிராமப்புற மக்களது வாழ்க்கை நிலை உயர வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த மாதிரியான நடவடிக்கைகள் தென் கொரியாவிலும், சீனாவிலும் மேற்கொள்ளப்பட்டு அங்கு நல்ல பலனை உண்டு பண்ணியிருக்கின்றன

(அடுத்த இதழில் முடியும்)


**மக்கள் மறுவாழ்வு**

**சந்தா விபரம்**

ஆண்டு சந்தா ரூ. 10—00
தனிப்பிரதி 75 காசுகள்

விபரங்களுக்கு:

மக்கள் மறுவாழ்வு
சென்னை — 600 094


# இலங்கை ஜூலைக் கலவரத்தின் எதிரொலி

யாரும் இறந்தால் வெள்ளைத்துணி போடுவது வழக்கம் இலங்கையில் சவப்பெட்டிக்குள் 'சட்டின்' வெள்ளைத்துணி அலங்காரம் செய்வது சிங்களவர்களுடைய பழக்கம் இவற்றைக்கூட இப்போது வாங்கிச் செய்ய முடியவில்லை. இதை வாங்க 40, 50 மைல்கள் செல்ல வேண்டிய நிலைமை இலங்கையில் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் 'சுட்டெரித்த ஜூலை ஆறு நாட்' களைத் தொடர்ந்து இலங்கையில் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மற்றும் மலைநாட்டில் பதுளை, நுவரெலியா போன்ற நகரங்களில் பெருவாரியாக இருந்த தமிழர்களின் கடைகள், கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

இதனால் சாதாரணப் பொருட்கள் கூட வாங்க முடியாத அளவுக்கு அங்கு நிலைமைகள் தோன்றியுள்ளதாக அங்கிருந்து வருகிறவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த கலவரத்தால் மிகப்பாதிப்பிற்குள்ளாகி இருப்பவர்கள் மலையகத்தமிழ் மக்கள் தான்; விலைவாசிகள் மலைபோல ஏறிவிட்டது வாங்கும் சக்தியிழந்த மக்களாகி மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பசிக்கும் பஞ்சத்திற்கும் ஆளாகி வருகிறார்கள் அந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்புகளாம் இவர்கள் அங்கே மனிதர்கள் அல்ல. உழைக்கும் யந்திரங்கள்

சிங்கள அரசை ஆளும் வர்க்கத்தைப் பொருத்தவரை அவர்கள் அதுவுமல்ல; ஒதுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட, நாட்டை விட்டு ஓடப்படும் 'இந்தியத் தமிழன்' கள்.

# சட்டங்கள் சம்பந்தப்பட்ட கருத்தரங்கு

இன்றைய நடைமுறை சட்டங்கள், நிலம், சிவில் பற்றிய கருத்தரங்கு கொடைக்கானல் செண்பகனூர் அன்றல் கொன்வென்டில் பிப்ரவரி 25, 26 தேதிகளில் நடைபெற்றது இந்த சட்ட விளக்க கருத்தரங்கில் விவசாயத் தொழிலாளர், சிறு விவசாய அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுடன் கிராம இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். வில்பட்டி, சர்வே நம்பர், பிளாக் காலவ, சிரமன் கொட்ஸ்டேட் சீனிவாசபுரம், உப்புபாறை, பேத்து பாறை; உகார்த்த நகர், பெருமாள் மலை, அண்ணா நகர், பள்ளங்கி, பாம்பா புரம் மன்னவனூர் மதுரை, சோகோ) ஆகிய இடங்களிலிருந்து 80 முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள்.

இந்த சட்ட விளக்கங்களை அட்வகேட் திரு ராஜகோபாலன் பி.ஏ பி.எல், (சென்னை) திரு பருக் பி. எ,பிஎஸ்ஸி, (மதுரை) அட்வகேட் அவர்கள் அளித்தார்கள்,

'சிரேக்' பிரேவிடன்ட் ஆகியவை இணைந்து இதை நடத்தின.

Editor & Publisher : T. S. RAJU, 31, Gingaiammat Kovil Street, Madras-600094. Printer L. S. Srinivasan : Jai Kalidas Press 29, B.E. Colony, 4th Street, Madras-600 024.

# சலுகைகள் வழங்குவதில் முட்டுக்கட்டை

கொடைகானல், கூகால் விவசாயத்திட்டத்திற்குச் செல்லும் தாயகம் திரும்பியோர் பலர் அங்கு தமக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் மறுக்கப்படுவதாக தெரிவிக்கிறார்கள்.

ரூபா 5000க்கு அதிகப்படாத பணம் கொண்டு வரும் அனைவருக்கும் குடும்பப் பராமரிப்பு உதவித் தொகை, குறைந்த விலையில் அரிசி போன்ற சலுகைள் 'வழங்கப்படுகிறது. விவசாயத் திட்டத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு ஆறு மாதங்களுக்கு இது வழங்கப்படுகிறது. இந்த 5000 ரூபா என்பதில் அவர்கள் கொண்டுவரும் நகைகளின் பெறுமதியைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை, ஆனால் மேற்படி விவசாயத் திட்டத்திற்கு செல்லுகிறவர்களுக்கு நகைகளின் பெறுமதியையும் உள்ளிட்டு ரூபா 5000க்கு மேல் கொண்டு வந்திருப்பதாக பலருக்கு மேற்படி சலுகைகள் மறுக்கப்படுவதாக தெரிவிக்கிறார்கள்.

மேலும், வீடு கட்டப்படும் வரை தற்காலிகமாக குடிசை போட்டுக் கொடுக்கப்பட வேண்டும். இதற்காக ரூபா 250க்கு மேல் மானியமாகவும் வழங்கப் படுகிறது, ஆனால் இங்கு குடிசைகள் கூட போட்டுக் கொடுக்கப்படவில்லையென்றும் பல குடும்பங்கள் மரத்தடியிலே தங்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் மழையிலும், பனியிலும் அவதியுற வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவர்களுக்கு நிலங்கள் வழங்குவதிலும் முறைகேடாக நடந்துகொள்வதாக தெரிவிக்கிறார்கள். இந்த திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிலங்களில் விவசாயத்திற்கு ஏற்ற நீர் பிடிப்புள்ள நிலங்களை தாயகம் திரும்புவோர் அல்லாதவர்களுக்கு வழங்கிவிட்டு, இவர்களுக்கு கரடு முரடான நீர் பிடிப்பில்லாததும் விவசாயத்திற்கு தகுதியில்லாததுமான நிலங்களை வழங்குவதாகவும் தெரிவிக்கிறார்கள்.

O

## வியாபாரிகள் போர்வையில் தொல்லை!

வியாபாரிகள் என்ற பெயரில் பலர் முகாம்களில் தங்கி இருக்கும் தாயகம் திரும்பியோர் கொண்டுவரும் பொருட்களை குறைந்த விலையில், அல்லது ஏமாற்றிக் கொண்டு செல்வது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தாயகம் திரும்பி முகாம்களில் தங்கி இருப்பவர்களுக்கு இவர்கள் பெரும் தொல்லையாக இருந்து வருகிறார்கள்.

யார் யார் இலங்கையில் இருந்து பெறுமதியான பொருட்களை கொண்டு வந்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டு சென்று பேரம் பேசுகிறார்கள். பேரம் படியவில்லை என்றால் அவர்களை மிரட்டுகிறார்கள்; பயமுறுத்தி மிகக் குறைந்த விலையில் பெற்றுச் செல்கிறார்கள்.

எதற்கும் படியாதவர்களைக் குடித்துவிட்டு வந்து கலாட்டா செய்கிறார்கள்; சம்பந்தப்பட்ட குடும்பப் பெண்களை கேவலப்படுத்த முயல்கிறார்கள்; ரவுடிகளை வைத்து அடிக்கின்றார்கள் என்று சமூகசேவையாளர் ஒருவர் தெரிவித்தார்.

O

## வெளி மாநிலம் செல்வோர் பணம் மாற்றுவதில் சிரமம்

மறு வாழ்வுத் திட்டத்தின் வேலை வாய்ப்புகள் பெற்று, வெளி மாநிலங்களுக்கு செல்கிறவர்கள், இலங்கையிலி வரும் தமதுபணத்தை மாற்றிக் கொள்வதில் சிரமத்திற்குள்ளாகிறார்கள்.

சிறிமாவோ — சாஸ்திரி ஒப்பந்தத்தில் குடிப் பெயர்ந்து வரும் இவர்கள் தமதுசேமிப்பை அன்னிய செலாவணி மூலம் பெர்மிட் பெற்று இங்கு கொண்டு வருகிறார்கள். இப்பணம், இவர்களுக்கு தபால் மூலமே அனுப்பி வைக்கப்படுகிறது. குடிப் பெயர்ந்து இங்கு வருகிறவர்களுக்கு சிறிலங்கா அரசு ரூபா 852 (இந்திய ரூபா) இலவசமாக கொடுக்கிறது. இதுவும் அப்படியே அனுப்பப்படுகிறது.

இவர்கள் இந்தியா வந்து 14 நாட்களுக்கு பிறகே இதை பெறுகிறார்கள். ஆனால் வேலை வாய்ப்பு பெற்று வெளி மாநிலங்களுக்கு அனுப்பப் படுகிறவர்கள் 7 நாட்களில் அனுப்பப்படுகிறார்கள்.

இதனால் இவர்கள் வெளி மாநிலங்களுக்கு சென்று இதற்காக மீண்டும் தமிழ் நாட்டிற்கு வரவேண்டியுள்ளது. இதனால் நூற்றுக் கணக்கான ரூபாய் சிலவு செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் பெறும் இலைசப் பணமான ரூபா 852யை பெறுவதில் எந்த லாபமும் இல்லாதவர்களாகி விடுகிறார்கள்.

இவர்கள் இந்த பணத்தை இவர்கள் சென்று குடியேறும் மாநிலங்களில் சம்பந்தப்பட்ட வங்கிகள் (இந்தியன் ஓவர்சீஸ் பேங்க்) மூலம் பெற்றுக் கொள்வதாக இருந்தால் கூட, அங்கிருக்கும் வங்கிக் கிளைகளுக்கு இது சம்பந்தமாக எதுவும் தெரிவதில்லை. இலங்கையிலிருந்து வரும் மக்களின் பணம் மாற்றுவது குறித்து என்ன செய்வது எப்படி செய்வது என்பது குறித்த அனுபவம் இல்லாதவர்களாக இருப்பதோடு அதுமாதிரியான நடவடிக்கைகள் அங்கு இல்லாதிருக்கிறது.

இதனால் வெளி மாநிலம் செல்வோர் தமது பணத்தை பெற்றுக் கொள்வதிலும் அதை வங்கிகளில் மாற்றிக் கொள்வதில் பணவிரயத்திற்கும் அலைச்சலுக்கும் உள்ளாகிறார்கள்.



மறு வாழ்வு

தொடர்பு முகவரி :

1, தெற்கு கங்கையம்மன் கோயில் இரண்டாவது தெரு,
சென்னை — 600 094